# திருக்கல்யாண இகனை

## விருத்தம்

வாருமென மங்கையர்க்கு விடையருளி மாயன்
வருணனுக்குந் தென்றலுக்கும் வான லோக
ஊருமிக அறிவதற்கு ஓலை தானும்
உடனெழுதி அழைச்சிடவே வந்தார் வானோர்
பாருடனே சங்கமது திரண்டு கூடிப்
பாவாணர் கீதமுறைப் பாடி நிற்க
சீருடனே கதிரவன் போயடைந்து மீண்டு
தினகரனு முதித்துவெள்ளி தோன்றிற் றன்றே

அம்மைமார்களிடம் நீங்கள் உங்களுடைய இல்லங்களுக்கு சென்று நாளை வெள்ளி உதித்தவுடன் வாருங்கள் என்று விடை கொடுத்துவிட்டு மேலோகத்தார்களை எல்லாம் இதனை மண் விழாவை செய்வதற்காக வரவழைக்க வேண்டும் என்று எண்ணி வருண பகவானுக்கும் தென்றலுக்கும் வானலோகத்தில் உள்ளவர்கள் அறிவதற்காக அங்கே ஓலை எழுதி அனுப்புகின்றார். உடனே வானவர்கள் தேவர்கள் சங்கத்தார்கள் எல்லாம் திரண்டு கூடி வந்தார்கள். பாவாணர்கள் கீதமுறை பாடி அங்கு வந்து சேர்ந்தார்கள்.

## விருத்தம்

தோன்றிய பொழுதே வானோர் ஈசர்மாது
துதிமுகனும் நான்முகனுந் தொல்வி மாதும்
கூன்றிருஷி தேவரிஷி வேத மானக்
குணயிருஷி கிணயிருஷி குலமா மாது
தான்றுசர சோதிபக வதிமா மாது
சதாகோடி தேவரம்பை சங்க மாக
மன்றுபுகழ் நாரணர்க்குந் தெய்வ கன்னி
மடவார்க்கு முகூர்த்தமென வந்தா ரங்கே

வெள்ளி கிழமை சூரியன் உதயமானது. அந்த நேரத்திலே ஈசர்மாதுவான உமையவளும், துதிமுகனான கணபதியும், நான்முகனான பிரம்ம தேவரும், தொல்விமாதான ஆதிசக்தியும், கூன்றரிசியான அனுபூதிமார்களும், தேவரிசியான பிரகஸ்பதியும், வேத வித்தர்களும், கலைவாணியும், ஞானம்பிகையான பகவதி தேவியும்,தேவமாதர்கள் அனைவரும் மற்றுமுள்ள வானோர்களும் , குண இருள்சி, கிணயிருள்சி குணமான தேவர் அரம்பையர்கள் சங்கமது ஒன்றாக திரண்டு கூடி நாராயணருக்கும் சப்த மாதர்களுக்கும் முகூர்த்தம் என்று அங்கே வந்தார்கள்.

## விருத்தம்

வானமதில் டம்மான முழக்கத் தேவர்
மலர்மாரி சலமாரி வானோர் தூவ
நான்முகனும் வேதமுறை முகூர்த்தங் கூற
நாரிமார் குரவையிட நமனு மாற
தானமுறை மாமடவார் சமனங் கூறத்
தரணிதனில் நாரணர்க்குந் தைய லான

மேனமுகில் மாதருக்கு மணமா மென்று
மேலோகப் பந்தலது விண்ணோ ரிட்டார்

அப்போது தேவர்கள் வானமதில் நின்று டம்மானம் முழங்கங்களை முழங்கினார்கள். வானவர்கள் மலர் தூவி நின்றார்கள். நான்முகனான பிரம்மா திருமுகூர்த்ததிற்கான வேத முறைகளை கூறினார் . பெண்கள் குரவையிட்டு சிறப்பித்தார்கள். பெண்கள் குரவை இடுகின்ற போது எமனும் அந்த இடத்தை விட்டு மாறி இருந்தான். மேலும் தான முறை மாமடவார்கள் சமணம் கூறி நின்றார்கள். நாராயணருக்கும் தையல் தெய்வமான மேல் முகில் மடவாருக்கும் மணம் என்று மேலோக பந்தல் அது இட்டு சிறப்பித்தார்கள்.

விருத்தம்

பந்தலுக்கு நமனாதி கால தாகப்
பக்கம்பதி னைந்தும்வளை பரப்ப தாகச்
சந்தமுடன் மேற்கட்டி மறைய தாகச்
சாருமேல் மேய்ந்ததுவே சமய மாக
அந்தமுறை சூரியனும் விளக்க தாக
அலங்கிருதம் வானக்கா யதுவே யாகச்
சொந்தமுள்ள சிவமதுவே பீட மாகத்
தேவரெல்லாஞ் செய்துபந்தல் சிறப்பித் தாரே

பந்தலை எவ்வாறு அமைக்கப்பட்டது என்றால் நவகிரகங்களான ஒன்பது கோள்களையும் பந்தலுக்கு கால்களாகவும், பக்கம் பதினைந்தான வளர்பிறை தேய்பிறை என்ற அந்த திதியை பந்தலுக்கு வளையாகப் பரப்பி இருந்தார்கள். சமயங்களை கூரையாகவும், மறையை மேல் கட்டியாக வேய்ந்தார்கள். சூரியனை விளக்காக அமைத்தார்கள். சிவத்தை பீடமாக அமைத்து தேவர்கள் எல்லாம் பந்தலை சிறப்பாக அமைத்தார்கள்.

விருத்தம்

சிறப்பித்தோ மென்றுமகா தேவ ரெல்லாம்
திருமாலி னடிபணிந்து சொல்வா ரப்போ
பிறப்பித்தப் பெம்மானே யெவர்க்கு மாய்ந்துப்
பேணியமு தளித்துவுயி ரனைத்துங் காக்கும்
உறப்பித்த மாலோனே அய்யா வுந்தன்
உதவியினால் பந்தலது விதானஞ் செய்தோம்
நிறப்பித்த மணமதுக்கு நாங்கள் செய்யும்
நிசவேலை யின்னதென நிகழ்த்து வீரே

பந்தலை சிறப்பித்து முடித்தவுடன் தேவர்கள் எல்லோரும் நாராயணனின் அடிபணிந்து நாங்கள் பந்தலை சிறப்பாக அமைத்து விட்டோம். அடுத்து நாங்கள் என்ன செய்ய வேண்டும் ஐயா என்று வேண்டி நின்றார்கள். அப்போது நாராயணன் அவர்களிடம் நீங்கள் இப்போது சிறப்பித்தது மிகவும் சிறப்பு.

விருத்தம்

தேவருரை யதனைமிகக் கேட்டு மாயன்
திருமனது மகிழ்ந்துவாய் திறந்து சொல்வார்
மூவருரை மாறம லெனக்கு முன்னே
மொழிந்ததெய்வ மாதர்களை முகூர்த்தஞ் செய்ய
நாவதுரை வருணனொடு வாயு தானும்
நளினமலர் தூவியது குளிர வீச
தேவருரை செய்துமிக நில்லு மென்று
தெய்வமட வார்வரவே சிந்தத் தாரே

முன்னால் மொழிந்த மொழிப்படி சப்தமாதர்களை திருமணம் செய்வதற்குரிய நேரம் வந்திருக்கின்றது. ஜீவ பிரம்ம ஐக்கியத்திற்கு வருபவர்களை சிறப்பாக வரவேற்பளிக்கபட வேண்டும். ஆகவே வருபவர்களை வரவேற்கும் விதமாக வருணபகவானை அங்கே நளின மலர் தூவி நிற்கவும், வாயு பகவானை குளிர வீசி நிற்கவுமான ஏற்பாடுகள் செய்து தேவர்களாகிய நீங்கள் எல்லோரையும் வரவேற்று நில்லுங்கள் என்று அவர்களுக்கு விடை கொடுத்தார்.

விருத்தம்

சிந்தித்த வுடனே யுந்தத் தேன்மொழி மாத ரெல்லாம்
வந்தவ ரடியைப் போற்றி வணங்கியே நாங்கள் பெற்ற
சந்ததி யேழு பேரும் தன்னுட கிளைக ளொக்கத்
தந்துநற் புவியை யாளத் தருவீரென் தலைவா என்றார்

தேவர்களுக்கு விடை கொடுத்துவிட்டு எம்பெருமான் அந்த தெய்வ மடவார்கள் வரவேண்டும் என்றுச் சிந்தித்தார். சிந்தித்த உடனே அந்த தேன்மொழி மாதர்கள் ஆகிய அம்மைமார்கள் எல்லோரும் நாராயணருடைய பாதம் பணிந்து நின்றார்கள்.

அவ்வாறு பாதம் பணிந்து நாராயணரிடம் எங்களுடைய சந்ததி ஏழு பேரையும் அதனுடைய கிளைகளையும் ஒக்க (முழுவதும்) தந்து இந்த புவியை ஆள வேண்டும் என்று பணிந்து நின்றார்கள்.

விருத்தம்

தருவீரென மொழிந்தகுல மாதே பெண்ணே
தலைவருங்கள் மக்களையுந் தருக வுங்கள்
மருவினியக் கருவதிலே யுதிக்க ஈன்ற
மனுவழியை யென்முன்னே வருகச் செய்தால்
தருமினிய சொத்தாஸ்தி பொன்னுங் காசு
தாறதுவுங் கொடுப்பதுவுங் சபையிற் பேசி
பெருகவுங்கள் தம்மை மணஞ் செய்துநீங்கள்
பெற்றபிள்ளை தந்துபுவி யாள வைப்பேன்

உடனே நாராயணர் அந்த அம்மைமார்களிடம் சொல்லுகின்றார் என்னுடைய பிள்ளைகளை எல்லாம் தந்து இந்த உலகை ஆள வேண்டும் என்று சொன்ன மாதர்களே நீங்கள் உங்களுடைய கருவதிலே உதித்து வந்த அந்த மக்களை என்முன்னே இப்போது நீங்கள் வரச் செய்ய வேண்டும். அவ்வாறு வர செய்தால் அவர்களிடம் கொடுக்கல் வாங்கல் எல்லாம் சபையில் பேசி உங்களை நான் மணம் செய்து கொள்ளுகின்றேன். நீங்கள் எனக்கு என்ன தர இருக்கின்றீர்கள் நான் உங்களுக்கு என்ன பரிசம் தர

இருக்கின்றேன் என்பதை இங்கே பேசி நாம் அதன் பிற்பாடு உங்களை நான் மணம் செய்கின்றேன் என்றுக் கூறினார்.

( அதாவது தூய்மை யான உள்ளத்தை யார் ஐயாவிடம் அற்பணிக்கின்றார்களோ அவர்களுக்கு தர்ம யுக வாழ்வாகிய பரப்பிரம்மத்தோடு ஐக்கிய மாகும் பாக்கியம் கிடைக்கும்)

விருத்தம்

புவியாள வைப்பேனென வுரைத்தீ ரெங்கள்
பொன்மானே கண்மணியே புரந்த மாலே
கவிஞோர்கள் போற்றுமதக் கன்றே தேனே
காயாம்பு மேனியரே கடவு ளாரே
இவிலோகக் கலியதிலே பிறந்த தாலே
இதுநாளும் வரையன்ன மீந்த பேர்கள்
செவியாலுன் பதமடைந்தா லவர்க ளேது
செய்வார்க ளெங்களொடு சேர்க்கை தானோ

உடனே அம்மைமார்கள் புவியியாள வைப்பேன் என உரைத்த எங்கள் பொன்மானே கண்மணியே புரந்த மாலே கவிஞர்கள் போற்றும் மதக்கன்றே தேனே காயாம்பு மேனியரே! கடவுளாரே! என்று அம்மாவைப் பணிந்து பரம்பொருளே இந்த கலியுகத்திலே நாங்கள் பிறந்ததாலே இது நாள் வரையிலும் எங்களுக்கு அன்னம் ஈந்த பேர்கள் மற்றும் எங்களுக்கு உதவி செய்தப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களும் உம்முடைய பாதாரம் அடைய வேண்டும் என்று அய்யாவோடு கேட்கின்றார்கள். அப்போது அவர்களையும் எங்களோடு நீங்கள் சேர்த்துக்கொள்வீர்களா என்று கேட்டவுடனே ஐயா கூறுகின்றார்,

விருத்தம்

சேர்க்கையுண்டோ எனமொழிந்த மானே பொன்னே
தேன்மொழியே யுங்களுக்குத் தெரியா வண்ணம்
வார்த்தையிது சொல்லாதே நமது வாழ்வும்
மக்களுட வாழ்வதுவு மொன்று போலே
மார்க்கமுடன் வைத்தரசு ஆள நானும்
மனமதிலே நினைத்திருக்கும் வளமை யாலே
கோர்கையிது அவர்கொடுக்கல் வாங்கல் தன்னை
கூறிமிகக் கேட்டுமணங் கூடு வேனே

மணங்கூடு னேனென வுரைக்க மாயன்
மனுவழியி லுதித்தகுலச் சான்றோ ரெல்லாம்
அணங்குஇன வழிபோலே யவர்கள் வந்து
ஆயனடிப் போற்றிமிக அன்பாய் நிற்கக்
குணங்குறிகள் கண்டுமிக அரியோன் மெச்சிக்
கொடுப்பதென்ன இவர்களைநான் மணங்கள் செய்தால்
பணங்கள்மிகப் பொன்காசு ரெம்ப ரெம்பப்
பாவையர்க்குச் சீதனங்கள் பகரு வீரே

சேர்க்கை உண்டோ என மொழிந்த மானே! பெண்ணே! அது உங்களுக்கு தெரியாதது அல்ல, நீங்கள் சந்தேகம் கொள்ள வேண்டாம். நமது வாழ்வு அவர்கள் வாழ்வு என்று

மக்களை நீங்கள் பிரித்து பார்க்க வேண்டாம். அந்த மக்களுடைய வாழ்வும் நம்முடைய வாழ்வும் ஒன்று போல நான் வைத்து அரசு ஆளுவேன். பேரின்ப வாழ்வை அருள் வேண்டும் என்று நான் மனதிலே நினைத்திருக்கின்ற வளமையால் அதற்குரிய கொடுக்கல் வாங்கல்களை பேசி இப்போது முடிவெடுக்க வேண்டும் என்றார். அதாவது நீங்கள் என்ன கொடுக்கின்றீர்கள் நான் எதை நான் உங்களுக்கு தர இருக்கின்றேன் என்பதை பேசி நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார்.

அந்த மாதர்களிடம் ஐயா உங்களையும் மக்களையும் எல்லோரையும் ஒன்று போல் இருந்து அரசாளலாம் என்று கூறிய உடனே, அங்கே அரங்கு இன வழியில் உதித்த குல சான்றோர் மக்கள் எல்லோரும் ஆயனடியை போற்றி அன்பாக வந்து நின்றார்கள்.

உடனே பரம்பொருளாகிய ஐயா அந்த சான்றோர் மக்களுடைய தூய்மையான உள்ளத்தை அறிந்து அவர்களை மெச்சி நீங்கள் கொடுப்பதனை இங்கே சொல்லுங்கள் என்றார். சான்றோர் மக்களிடம் மக்களே உங்களுடைய தாய்மார்களாகிய சப்தமாதர்களை நான் மணம் புரிந்தால் அதற்கு நீங்கள் என்ன கொடுப்பீர்கள். இவர்களுக்கு சீதனமாக எதை நீங்கள் கொடுப்பீர்கள் என்பதை சொல்லுங்கள் என்றார்.

விருத்தம்

பகருவீ ரெனமொழிந்த அய்யா நீரும்
பரிசமென்ன எங்களுக்குப் பண்பா யீவீர்
உகருமெனச் சொல்லிடவே சான்றோ ரெல்லாம்
உடையகுலச் சொக்கருமே உரைப்பார் பின்னும்
தகருமோ நான்தருகுந் தங்கக் காசு
சதாகோடி யெண்ணமது தாணோ இல்லை
நிகருவீர் நீங்கள்தருஞ் சொத்தை யெல்லாம்
நினக்கறியச் சொல்லிடுங்கோ நிசமா யென்றார்

உடனே சான்றோர் மக்கள் எல்லோரும் பரம்பொருளிடம் பரிசம் என்ன எங்களுக்கு பண்பாக ஈவீர்கள் என்று அவர்கள் எல்லோரும் அய்யாவிடம் கேட்டார்கள். அப்போது ஐயா சொல்லுகின்றார் "**தகருமோ நான் தரும் தங்க காசு சதாக்கோடி எண்ணமது தானோ இல்லை**" ***அதாவது நான் தருகின்ற அந்த பரிசம் என்பது எண்ணம் இல்லாத வாழ்க்கை கலியிலிருந்து விடுபடக்கூடிய அந்த பெரும் பேறாகிய எண்ணமற்ற வாழ்வை உங்களுக்கு அருள்வேன்*** என்று கூறினார். உடனே சான்றோர் மக்கள் எல்லாம் ஐயாவே இவ்வளவு பெரிய பேறினை எங்களுக்கு நீங்கள் அருள் புரிவீர்கள் ஆனால் நாங்கள் முதல், நாங்கள் வைத்திருக்கின்ற சொத்துக்கள் என்ன எல்லாமே உங்களுக்கு நாங்கள் தருகின்றோம் ஐயா என்றனர்.

விருத்தம்

ஆண்டவரே யிப்பரிசந் தருவீ ரானால்
யாமடியா ராளுகின்ற வஸ்து வெல்லாம்
கூண்டபண்டம் பொன்னுடைமை யாடு மாடு
குருபரனே யாங்கள்வரை யுமக்குச் சொந்தம்
மீண்டடிமை முக்காலு முமக்கு நாங்கள்
விலையடிமை யானோங்காண் விரைய மாலே
பாண்டவரைக் காத்துரெட்சித் தாண்டாப் போலே

பாவையரு மக்களுமும் பக்கந் தானே

சான்றோர் மக்கள் ஐயாவிடம் ஆண்டவரே! நீங்கள் எண்ணம் இல்லாத வாழ்வை எங்களுக்கு அருள்வீர்களேயானால் நாங்கள் ஆளுகின்ற வஸ்து கூண்டபண்டம் பொன்னுடமை ஆடு மாடு குருபரனே நாங்கள் எல்லோரும் உமக்கு விலை அடிமை ஆனோம் என்று கூறினார்கள். பாண்டவரை காத்து இரச்சித்து ஆண்டது எங்களையும் உங்களுடைய பிள்ளைகளையும் வைத்து ஆண்டு கொள்ள வேண்டும் ஐயா என்று வேண்டி நின்றார்கள்.

விருத்தம்

பக்கமது என்றவுடன் மாயன் தானும்
பதறாதே உங்களையுங் காத்துக் கொள்வோம்
ஒக்கவெனக் குங்களையும் ஆண்டு கொள்வோம்
ஒன்றுபோ லிருந்துபுவி யாள்வோம் நாமும்
தக்கமதொன் றில்லையப்பா இந்த வார்த்தை
தந்ததுவு மீந்ததுவுந் தவறோ இல்லை
மிக்கதெய்வக் கன்னியரை மணங்கள் செய்ய
மெல்லிகையைப் பிடித்தெனக்கு விடுகு வீரே

மனிதனுடைய மனதில் தோன்றுகின்ற எண்ணமே மனிதனுடைய அனைத்து துன்பங்களுக்கும் காரணமாக அமைகின்றது. மீண்டும் மீண்டும் பிறக்கக்கூடிய நிலை இந்த எண்ணத்தினால் வருகின்றது. அத்தகைய எண்ணத்தை இல்லாமல் அருள்வேன் என்று சொல்லுகின்றார். அதைவிட சிறந்த பேறு என்பது வேறு எதுவும் இல்லை. ஆகவே அந்த எண்ணம் இல்லாத வாழ்வை அருள்வேன் என்று சொன்னவுடனே சான்றோர் நாங்கள் எல்லோரும் உங்களுக்கு அடிமையானோம் என்றனர். எண்ணம் இல்லாத அந்த உள்ளமானது தூய்மையாக இருக்கும் .அந்த உள்ளத்திலே கலிமாய எண்ணங்கள் எதுவும் இருக்காது. அதனால் கர்மவினைகள் எல்லாம் அகற்றப்பட்டு தூய உள்ளம் ஆக்கப்பட்டு பேரின்ப நிலையாகிய பேறினை அடைய வழிவகுக்கும். இத்தகைய பேறினை இறைவனால் அருளப்படுகின்றது என்றால் அதைவிட சிறப்பு எது இருக்க முடியும். ஆகவே சான்றோர் மக்கள் எல்லோரும் நாங்கள் உங்களுக்குள் அடிமையானோம் ஐயா என்றுக் கூறினார்கள்.

விருத்தம்

கைப்பிடித்துத் தாருமென வுரைத்தீ ரையா
கணவரல்லோ முன்னவர்க்குக் கருணை மாலே
மெய்ப்பிடித்த மெல்லியருந் தேவி யல்லோ
மேதினிக ளறியஅவ தாரஞ் செய்தீர்
எப்படித்தா னாங்கள்கையைப் பிடித்து ஈய
இவ்வுலகி லவதார இகனை தானோ
எப்படியோ அறியோங்கா ணென்று சொல்லி
ஏந்திழைமார் கைப்பிடித்தங் கீய லுற்றார்

அப்போது அய்யா அம்மைமார்களிடமும் சான்றோர் மக்களிடமும் பதறாது உங்களை நான் காத்துக் ஆண்டு கொள்வேன். நாம் எல்லோரும் ஒன்றாக இருந்து இந்த உலகத்தை ஆளலாம். இதில் எந்த விதமான மாற்றமும் இல்லை. தந்ததும் கொடுப்பதுவும் தவறே இல்லை. ஆகவே உங்களுடைய தாய்மார்களை என்னோடு ஐக்கியமாக்க எனக்கு உங்கள் அம்மைமார்களுடைய கையை பிடித்து தாருங்கள் என்று

சான்றோர் மக்களிடம் ஐயா கேட்டார். மக்களிடம் கேட்டவுடனே அவர்கள் ஐயா நீங்கள் இவர்களுக்கு முன்னமே கணவர் தானே! அப்படி இருக்கின்ற போது இப்போது எங்களிடம் ஏன் இந்த கைபிடித்து கேட்கின்றீர்கள்? இவர்கள் உங்களுடைய மனைவியர்கள் தானே! என்று அங்கு கேட்கின்றார்கள் எப்படி நாங்கள் இந்த கையைப் பிடித்து தருவது? இப்படி தாங்கள் கேட்பது இந்த அவதாரத்தின் இகனையோ? எப்படி என்று எங்களால் அறிந்துக் கொள்ள முடியவில்லை என்றுச் சொல்லி அந்த ஏந்திழைமார் கையை பிடித்து பரப்பிரம்மம் திடம் ஒப்படைத்தார்கள்.

விருத்தம்

ஈந்திடவே மாயவருந் தங்கத் தாலே
ரத்தின வொளி போல்வீசுந் தாலிதன்னை
மாய்ந்துமிகப் போகாமல் தாலி வாழ
மகாதர்ம யுகம்வாழ மாதும் வாழ
ஏந்துபுவி தர்மமது தழைத்து வாழ
ஈசர்முத லெல்லோரு மிருந்து வாழ
சாந்தகுலச் சான்றோர்கள் தழைத்து வாழ
தாலிமிக வாழவென்று தரித்தார் தாலி

அதாவது தூய உள்ளதோடு இருக்குன்னா ஆன்மாக்களை ஐயா தன்னோடு ஐக்கிய படுத்துவது தான் இந்த இகனை மணம் ஆகும். அவ்வாறு சான்றோர் மக்கள் யார் யார் தகுதி உடையவர்கள் என்பதையும் அம்மைமார்களையும் அங்கே தன்னோடு ஐக்கியப் படுத்திக் கொள்ளக்கூடிய அந்த ஜீவபிரம்ம ஐக்கிய நிலையானது அங்கே நிகழ்கின்றது.

மாய்ந்து மிகப் போகாமல் தாலி வாழ, மாகா தர்ம யுகம் வாழ மாதும் வாழ ஐந்து புவி தர்மமது தழைத்து வாழ ஈசன் முதல் எல்லோரும் இருந்து வாழ, சான்றகுலச் சான்றோர்கள் தழைத்து வாழ தாலிமிக்க வாழ வேண்டும் தாலி தரித்தார். பக்குவ நிலையை எட்டிய ஜீவாத்மாக்களை எல்லோரும் நீடூழி காலம் வாழ வேண்டும் என்று தன்னோடு ஐக்கிய படுத்திக் கொண்டார்.

விருத்தம்

தாலிமிகத் தரிக்குகையில் மாத ரோடு
தமனியநா தன்மகிழ்ந்து தானே சொல்வார்
கேலிமிக வுரையாதீ ரெனக்கு இன்னம்
கெணிமடவா ரநேகமுண்டு மணங்கள் செய்ய
சோலியல்லோ ஆச்சுதென்று நினையா துங்கோ
தொல்புவியை யரசாள்வீர் நிசமே சொன்னோம்
மாலினுட சூட்சமகா கோடி யுண்டு
மனதுசடை யாமல்மிக வாழுவீரே

விருத்தம்

வாழுவீர் கூடுவிட்டுக் கூடு பாய்வேன்
மறுவூரு பாய்ந்துவுங்கள் மனதில் வாழ்வேன்
மாளுவேன் முழித்துப்பின் வருவே னுங்கள்
மனதலைந்து எனைஇகழ்ந்து மாளா துங்கோ

அவ்வாறு ஐக்கிய படுத்திக் கொண்ட உடனே எம்பெருமான் மகிழ்ந்து அந்த அம்மைமார்களோடு பேசுகின்றார், எவ்வாறென்றால் நீங்கள் என்னை கேலி உரையாதுங்கோ. உங்களை நான் இப்போது என்னோடு ஐக்கிய படுத்திக் கொண்டது போலங இன்னும் அநேக ஜிவாத்மாக்கள் என்னுடைய ஐக்கியப்பட வேண்டி இருக்கின்றது. ஆகவே அவர்களையும் என்னோடு ஐக்கிய படுத்துகின்றது வரையிலும் இந்த இகனையானது தொடர்ந்து கொண்டே இருக்கும். ஆகவே இவருடைய வேலை இதுதான் என்று நீங்கள் என்னை ஏளனமாக என்ன வேண்டாம். அது மட்டுமல்ல மாயனுடைய சூட்சமம் மகா கோடி உண்டு. ஆகவே மனது சடையாமல் நீங்கள் வாழுங்கள் என்று கூறினார்.

தோழிலே யிருந்துபல சூட்சஞ் செய்வேன்
தோகையரே நீங்களெல்லா மெனது பாயம்
நாளிலே யறிந்துமிகக் கண்டு கொள்ளும்
நாரணரி னடப்பிதுவே ஞாயஞ் சொன்னோம்

விருத்தம்

சொன்னமொழி தனைமறந்து நீங்க ளெல்லாம்
தூசணித்து எனைக்கபட மெண்ணா துங்கோ
என்னுடையத் தொழிலிதுவே உங்க ளோடு
இருந்துதர்ம முடிசூடி யாளு மட்டும்
பொன்னுடைய நாடதற்கு வானோர் தம்மைப்
போகவிடை கொடுக்கஅவர் போனா ரங்கே
கன்னிமட வார்கையைப் பிடித்துக் கொண்டு
கருணைபதித் தெருவீதி வருகின் றாரே

மேலும் சொல்லுகின்றார் நான் உங்களோடு வாழ்ந்து கொண்டு இருப்பேன். அதே நேரத்தில் கூடுவிட்டு கூடு பாய்வேன். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இருப்பேன். ஆனால் நான் உங்களோடும் இருப்பேன். அது மட்டுமல்ல மறுவீடு பாய்ந்து உங்கள் மனதில் வாழ்வேன். வேறு ஜீவாத்மாக்களுடைய உள்ளங்களிலும் இருந்து அவர்களையும் நான் நற்பேறு பெறுவதற்கான வழிகளை செய்வேன்.

அப்போது எங்களை விட்டு ஐயா மாயமாகிவிட்டார் என்று எண்ண வேண்டாம். உங்களுடைய உள்ளத்தில் இருப்பது போல எல்லா ஜீவாத்மாக்களினுடைய உள்ளங்களிலும் இருந்து நான் வருவேன். என்னை நினைக்கின்ற பேர்களிடம் இருந்து அவர்களை என்னுடனே ஐக்கிய படுத்துவேன். மேலும் என்னை நினைக்காத அந்த ஜீவாத்மாக்களிடமிருந்து விலகி . மேலும் அவர்கள் பக்குவப்படுகின்ற நிலை வருகின்ற போது அவர்களை என்னோடு நான் ஏற்றுக் கொள்வேன். இது என்னுடைய சொந்த வித்தை ஆகும் மீண்டும் மீண்டும் நடந்து கொண்டே இருக்கும் .

ஒவ்வொரு ஜீவாத்மாக்களையும் பக்குவப்படுத்தி ஐக்கிய படுத்துகின்ற வரையிலும் அவரவருடைய உள்ளத்திலே இருந்து பல சூட்சம வேலைகளை செய்வேன். ஆகவே தோகையரே நீங்கள் யெல்லாம் என்னுடைய வாயம். இவை என்னுடைய சூட்சம வேலைகள். ஆகவே அந்தந்த நாட்களில் நீங்கள் அதை அறிந்து கண்டுக் கொள்வீர்கள். இதுதான் நாராயணருடைய சூட்சமம் என்று அறிந்து அதன்படி நீங்கள் இருங்கள் என்பதை நான் உங்களுக்கு முன்னமே சொல்லுகின்றேன். ஆனால் நான் சொன்ன மொழியை மறந்து நீங்கள் தூசணித்து என்னை கபடமாக எண்ண வேண்டாம் இது என்னுடைய தொழில். நான் தர்மபுரி ஆட்சியில் இருந்து உங்களை ஆளுகின்றது

வரையிலும் அனைத்து ஜீவாத்மாக்களையும் ஒன்றோடு ஐக்கிய படுத்தி ஒரு குடைக்குள் நான் இந்த உலகை ஆளுகின்றது வரையிலும் என்னுடைய தொழில் இதுதான். ஆகவே நீங்கள் சோர்ந்து போகாமல் வாழ வேண்டும் என்று கூறினார்.

அவ்வாறு கூறிவிட்டு விழாவிற்காக வந்திருந்த பொன்னுலோகத்தாரான மேலோகத்தார்களை விடைகொடுத்து அவருடைய லோகத்திற்கு போவதற்காக எம்பெருமான் விடை கொடுக்குகின்றார். அவர்களும் அங்கே செல்லுகின்றார்கள். அதன் பிற்பாடு அந்த தன்னோடு ஐக்கிய படுத்திய அந்த ஜீவாத்மாக்களின் உள்ளங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்களை தன்னுடனே அழைத்து கொண்டு தெருவீதி வலம் வருகின்றார்.

சிந்து

தெருவீதி நாம்வருவோம்-எந்தன்
தேவியரே கன்னிநாயகமே
மருவினிய கன்னியரே-பதி
வலங்கள்சுற்றி நாம்வருவோம்

ஐயா அம்மைமார்களை தன்னுடனே ஐக்கியப் படுத்திக் கொண்டு அவர்களையும் அழைத்துக்கொண்டு தூய உள்ளத்தோடு இருக்கும் ஆன்மாக்களை தேர்ந்து எடுப்பதற்காக தெரு வீதி வலம் வருவோம் என்று அழைத்து தெருவீதி வலம் வருகிறார்.

கண்மணியே காரணரே-ஒகோ
காயாம்பு மேனியரே
மண்ணேழ ளந்தவரே-ஒகோ
மாயவரே பதிவலம்வருவோம்

உடனே அந்த தாய்மார்கள் சாமியை பார்த்து கண்ணில் மணியே நிற்பவரே அனைத்து மூலத்துக்கும் காரணமானவரே! எல்லையற்ற கருணா கடலே! எங்கும் நிறைந்தவரே! ஏகமயமானவரே! மாயைக்கெல்லாம் அதிபதியே! என்று அவரை பின்தொடர்ந்தது வந்தார்கள்.

பெண்ணரசே மாமயிலே-நமது
பொறுமைப்பதி வலம்வருவோம்
தண்ணமுள்ளத் தேவியரே-நமது
தருமபதி வலம்வருவோம்

பரம்பொருள் அம்மைமார்களிடம் ஒளிமயமான மாமயிலே! பெண்ணரசே! கருணையின் வடிவான தன்மை உள்ள தேவியரே! வாருங்கள் பூலோக மக்கள் எல்லாம் ஆன்ம விழிப்படைந்து பொறுமை பெரியோராய் ஆகட்டும். தர்மத்தை தாங்கும் வல்லமை பெறும் பொருட்டு தெருவீதி வலம் வருவோம் என்று அழைத்து வலம் வந்தார்.

ஆண்டமணி நாயகமே-உலகு
ஆண்டருளு மெங்கண்மணியே
காண்டம்நிறை வேற்றவந்த-எங்கள்
கணவனாரே நாம்வலம்வருவோம்

சாகாத தர்ம அன்புடையோரை நும் கருணை என்னும் ஒரு குடையில் வைத்து ஆள வந்த ஆண்ட மணி நாயகமே! பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் தங்களுடைய ஈர்ப்பு சக்தியால் இயக்கி வரும் என் கண்மணியே! உலகை உய்வித்தல் என்னும் காண்டம் நிறைவேற்ற வந்தவரே எங்கள் பரம புருஷனை இதோ வருகிறோம் எல்லா ஜீவாத்மா களும் உயர்வு பெற அருள்வோம் என்று வலம் வந்தார்கள்.

பொறுமைப்பதி வலம்வருவோம்–கலிப்
பொடியயாமம் போட்டிடுவோம்
தருமமது தழைக்கச்செய்வோம்–பதி
தானேவலம் நாம்வருவோம்

பொறுமை காத்தல் என்னும் வைராக்கியத்தை நிலைப்படுத்தி ஞானமருளி கலிமாய நினைவுகளை எல்லாம் பொடிப்பட்டு போகும் படி செய்வோம். உயிர்களை உய்விக்கும் பெரிய தர்மமாகிய பக்தியை தழைக்கச் செய்வோம் வாருங்கள் என்று அழைத்துக் கொண்டு தெருவீதி வலம் வந்தார்கள்.

பொல்லாத வகையழித்து–சுவாமி
புதுப்பூமி தோணவைத்துக்
கல்லாதார் கருவறுத்து–சுவாமி
அதிகபதி வலம்வருவோம்

பொல்லாத வகைகளாகிய புலன்களையும், பொல்லாத எண்ணங்களையும் , கல்லாத புல்லறையும் முற்றிலும் ஒழித்து மக்களை பரிபூரண நிலையில் பக்குவப்படுத்தி புதுமை பூமியாக தர்மயுகத்தில் தழைத்திருக்கச் செய்ய பதி வலம் வருவோம் என்று வலம் வந்தார்கள்.

நாடும்பதி தலங்கள்வாழும்–பெண்ணே
நம்முடைய இனங்கள்வாழும்
கேடுகலி கோடுஅறும்–பெண்ணே
கிளர்ந்தபதி வலம்வருவோம்

தூய்மையான உள்ளத்தோடு இருக்கும் ஆன்மாக்களை வாழ்விக்கும் பொருட்டும், நம்முடைய இனங்களான தூய ஆன்மாக்களை வாழ வைக்கும் பொருட்டும் கலிமாயின் வல்லமையை அழித்து நாடும் பதி தலங்கள் என்னும் தர்மபதி வாழ்வை தோற்றுவித்து நம் இனங்களாகிய அன்பு உடைய பக்தர்களை அக கண் திறக்க செய்து அங்கு வாழ்விப்போம் என்றுக் கூறி வலம் வந்தார்கள்.

ஆகாத பேரையெல்லாம்–சுவாமி
அக்கினிக்கு விருந்தளித்து
வாகாகத் தர்மபதி–சுவாமி
வாழும்பதி வலம்வருவோம்

ஆகாத பேர்களாகிய அகப்பகையோடு வாழும் தீயவர்களை அழித்து அக்கினிக்கு விருந்தளித்து நம் மக்களெல்லாம் ஒளிவுடல் முதலான நான்கு வரங்களையும் பெற்று மகிழ்ந்து இன்பமுற வாழும் பதியாகிய தர்மபுரி ஆள்வதற்கு வலம் வருவோம் என்று வலம் வந்தனர்.

முன்குறோணி உதிரமதால்-பெண்ணே
உதித்துவந்தக் குலங்களெல்லாம்
தன்குணத்தால் மாண்டுபோக-பெண்ணே
தர்மபதி வலம்வருவோம்

குறோணியின் உதிரத்தால் உதித்து வந்த அசுர சக்திகளான பொல்லாததை எல்லாம் தன்னாலே தான்கட்டு போக செய்யும் படி செய்து, இறை நம்பிக்கை மில் வாழும் நல்ல மக்களை தர்மபதியில் வைத்து அரசாள்வோம் என்று வலம் வந்தார்கள்

மாற்றானொ ழியவேணும்-சுவாமி
மக்களெல்லாம் வாழவேணும்
காத்தோரைக் கைவிடாமல்-நாமள்
கருணைபதி வலம்வருவோம்

மாற்றானாகிய அசுரச் சக்திகளை ஒழிப்போம். சரியான கொள்கை, சரியான ஒழுக்கம், சரியான ஞானம் ஆகிய திரு ரத்தின வைராக்கியத்துடன் வாழ்பவரையும், அன்பு,பொறுமை, தர்மத்தை தவறாது கடைப்பிடித்து வருபவர்களைக் கைவிடாமல் காத்தருள்வோம் என்று வலம் வந்தார்கள்.

தெண்டமிறை பொய்களவு-பெண்ணே
செய்யும்வண்டக் குலங்களெல்லாம்
கொண்டகலி கூடமாண்டு-குரு
நாதர்பதி வலம்வருவோம்

கொடிய அபராத வரி விதித்தும், பஞ்சபாதகச் செயல்களைப் பதறாமல் செய்து, நல்லோரை கொடுமைப்படுத்தும் கலி நீச குலங்களான அசுர சக்திகள் முற்றிலும் அழிந்து போக செய்ய குரு நாதர் பதி நாம் வலம் வருவோம் என்று வலம் வந்தார்கள்.

வீணான கலியுகத்தை-சுவாமி
வெய்யோனுக் கமுதளித்துச்
சாணாரை வைத்தாள-சுவாமி
தர்மபதி வலம்வருவோம்.

மனித பிறவிகள் மகத்துவம் உணராது அப்பிறவியை வீணாக்கும் ஆணவ கலி நீசர்களைக் கொண்ட கலியுகத்தை ஞான ஒளியாக வெய்யோனுக்கு அமுத அழித்து, மெய்கொண்ட மணிகளாக மேன்மக்களாக சான்றோர் மக்களை தர்மபுரியில் வைத்து அரசாள தர்மப்பதியை வருவோம் என்று வலம் வந்தார்கள்.

நாடும்பதி துலங்குதடி-பெண்ணே
நல்லசிலை குதிக்குதடி
ஆடுமாடு அருகுதடி-கர்த்தா
ஆவினங்கள் தோணுதடி

நல்லபதியாகிய தர்ம பதியை துலங்க செய்து, மக்களின் உள்ளங்களில் இறையருளை உணர்ந்துக் கொள்ள அகப்பகைகளை மாற்றி , தூய ஆன்மாக்களை தோன்ற வைக்க நாம் வலம் வருவோம் என்று வலம் வந்தார்கள்.

நல்லபதி துலங்கணுமே–சுவாமி
நாடுதர்ம மாகணுமே
பொல்லாப்பது ஒழியணுமே–சுவாமி
புத்தியொன்றாய்க் குவியணுமே

மெய்ஞானத்தை மலர செய்து மக்களை தர்ம சீலர்கள் ஆக்குவோம். பொல்லாப்பு என்னும் மிருக குணங்கள் அல்லது பயங்கரவாதத்தை ஒழிப்போம். புத்தி ஒன்றாக குவிய செய்வோம். எல்லோரும் நாம் ஒன்று என்பதை உணர்ந்து செயல் படுவது ஞானம். ஆனால் பிரித்து காண்பது அஞ்ஞானம் என்பதை உணர்ந்து எல்லோரையும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுடன் வாழ்வை மேன்மை பெற செய்வோம். அறிந்து பல சாதி முதல் அன்பொன்று குள்ளானால் பிரிந்து மிகப் போகாமல் பெரியோராய் வாழ்ந்திருப்பார் எனும் அகில திருமொழியின் வழி எல்லோரையும் ஒன்றாக்குவோம். அதற்குரிய ஞானத்தை மக்களுக்கு கொடுத்தருள்வோம் என்று வலம் வந்தார்கள்.

கோவில்தெரு துலங்கணுமே–நம்மள்
கோட்டைவெளி யாகணுமே
தேவருட நல்திருநாள்–பெண்ணே
தினமும்வந்து கூடணுமே

கோவில் தெருவாகிய தூய்மையான உள்ளத்தை மலரச் செய்து, கோட்டை வெளி என்னும் ஞான காயப் பெருவெளியில் ஐக்கியமாகி மகிழச் செய்வோம்.
நல்ல உள்ளத்தோடு வாழ்பவர்களுக்கு நித்தம் திருநாளாக எந்நாளையும் கொண்டாடச் செய்வதற்காக நாம் இந்த பதியை வலம் வருவோம் என்று வலம் வந்தார்கள்.

தங்கத்தொட்டில் தண்டாயமும்–சுவாமி
தாண்டும்பதி வீதிகளும்
சங்கமுடன் டம்மானமும்–சுவாமி
தலத்தில்வந்து தோணணுமே

ஆன்ம ஞானம் விளங்கப்பெற்றவர்களுக்கு தங்கத் தொட்டில் தண்டாயத்துடன் இருக்கும் தர்மபதியைத் தோன்ற வைத்து நித்தம் திருநாளாக எந்நாளையும் வெற்றி டம்மான முழக்கத்தோடு விளங்கச் செய்து அதில் மக்களை களிப்புற்று இருக்க செய்ய வேண்டும்.

கோட்டையிட்டுக் கொடியுங்கட்டி–பெண்ணே
கொத்தளமாய் மேடைசெய்து
நாட்டையெல்லாம் தான்கிலுக்கி–பெண்ணே
நமக்குப்பதி யேறணுமே

கலிமாயை வென்றவர்களுக்கு தர்மபதி வாழ்வாகிய பேரின்ப வாழ்வை அருளி , அந்த பேரின்பத்தில் நிறைந்திருக்க செய்ய வேண்டும். மேலும் கலியின் மாய்கையில் சிக்குண்டு இருக்கும் மக்களை அதிலிருந்து விடுவித்து மக்கள் இறை தரிசனம் கண்டு மகிழ செய்வோம். உலகியல் ஆசைகளில் இருந்து மக்களை விடுவித்து தெளிந்தெடுத்து (சோதனைகள் மூலம் தெளிவுப்பெறச் செய்து) தர்மபுரியில் வைத்து அரசாள்வோம்.

நம்பினோரைக் காக்கணுமே–சுவாமி
நாடுகட்டி யாளணுமே

அம்பலங்க ளேறணுமே–சுவாமி
அவதாரங்கள் நடத்தணுமே

அவதார இகனைகள் மூலம் பரம்பொருள் ஒன்றே என்று நம்பின மக்களை தர்மபதியில் வைத்து அரசாள வேண்டும். மேலும் நித்தம் திருநாளாக எந்நாளையும் கொண்டாடும் படியாகச் செய்ய வேண்டும்.

சிங்காசன மேறணுமே–பெண்ணே
தீவட்டிகள் போடணுமே
கண்காட்சை காணணுமே–நானும்
கன்னியரைக் கைப்பிடித்தால்

இறைவனுடைய ஒரு குடைக்குள் ஆளக்கூடிய அந்த தர்மயுக ஆட்சி பெற வேண்டும். ஆன்ம ஞானம் விளங்கப்பெற்றவர்களுக்கு தீவெட்டிகளோடு நித்தம் திருநாள் நடத்தி அந்த கண்காட்சிகளை எல்லாம் முக்தி நிலை அடைந்த ஜீவாத்மாக்களால் சிறப்பாக செய்ய வேண்டும்.

பாக்கியங்கள் பெருகணுமே–சுவாமி
பாரிலுள்ளோர் காணுதற்கு
ஆக்கிநாங்கள் படைக்கணுமே–சுவாமி
அமுதருந்தி வாழணுமே

ஆன்ம விழிப்பு அடைந்து இறைஞானத்தை பெற்ற மக்களுக்கு எல்லாவிதமான சிறப்புகளும் பெருகும். இந்த சிறப்புகளை பார்த்து இந்த உலக மக்கள் எல்லாம் நாங்களும் அந்த நிலையை அடைய வேண்டும் என்ற நிலை உருவாக்க வேண்டும். அவ்வாறு ஞான அமுதத்தை மக்கள் பெற்று வாழ்வதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

மக்கள்பெற்று வாழணுமே–பெண்ணே
வந்துவென்றான் கால்பிடித்து
ஒக்கல் நின்றோ ராடணுமே–பெண்ணே
உற்றபள்ளி மெத்தைசூழ

ஆன்ம ஞானம் வெளிப்படைகின்ற போது அந்த ஒவ்வொரு ஜீவாத்மாக்களும் இறைவனோடு ஐக்கியமாகி விடும். அதன்படி ஒவ்வொரு ஜீவாத்மாக்களும் முக்தி அடைகின்ற போது, அதனை தொடர்ந்து வருகின்ற ஜீவாத்மாக்களுடைய பிதிரில் வரக்கூடிய ஒவ்வொரு மக்களும் அந்த முக்தி என்ற பேறினை பெற வேண்டும். அவ்வாறு பேரின்ப பேறினைப் பெற்று எல்லோரும் ஒன்றாக இருந்து தர்மபுரி ராஜ்ஜியத்தில் ஒன்றாக இருந்து இந்த உலகை அரசாள வேண்டும்.

பால்பவிசு பெருகணுமே–சுவாமி
பஞ்சணையில் கொஞ்சணுமே
தூலருமை யறியாமலே–கலி
தொல்புவியு மயங்கணுமே

ஒவ்வொரு ஜீவாத்மாக்களும் தன்னுடைய பிறவியின் நோக்கத்தை அடைந்து பேரின்ப வாழ்வாகிய தர்மபுரி ராஜ்யத்தை ஆளுகின்ற அந்த பெருமை பெற வேண்டும். ஆனால் அதை அறியாமல் ஆன்ம ஞானம் பெற தகுதி அற்றவர்கள் இது வீணான வாழ்க்கை

என்று பேரின்பத்தின் தன்மையை உணராமல் பூலோக வாழ்வுதான் இன்பத்தை தருகிறது என்று அதில் மயங்கி இருப்பார்கள்.

சமுசாரி யாகணுமே-பெண்ணே
தலையிற்சோறு சுமக்கணுமே
ஓவுதாரி யாகணுமே-பெண்ணே
உங்களைநா னடிக்கணுமே

இந்த உலக வாழ்க்கையில் வாழுகின்ற போது எல்லாவித செல்வங்களையும் பெற்று நீங்கள் சிறப்பாக வாழ வேண்டும். இல்லற வாழ்வில் வாழ்ந்து கொண்டு இல்லற தவத்தை நிறைவேற்றி நீங்கள் ஆண்மை ஞானத்தை பெறுவதற்குரிய வழிமுறைகளை தேட வேண்டும். அதை விடுத்து இல்லற வாழ்வே பெரிது என்று இருக்கின்ற போது உங்களை பண்படுத்தி ஆன்மிக ஞானம் விளிப்படைய செய்வதற்காக நான் உங்களை பல சோதனைகளை எல்லாம் தந்து உங்களை பண்படையச் செய்ய வேண்டும்.

அயலூரு போகணுமே-சுவாமி
அழைக்கநீரும் வரவேணுமே
கயல்விழிமா ரொருவர்க்கொரு-சுவாமி
கத்துதல்கள் கொள்ளணுமே

நான் தருகின்ற சோதனைகளை ஏற்றுக்கொள்ள முடியாமல் நீங்கள் நான் சொன்ன வழியை விட்டுவிலகி வேறு வழியை கடைபிடித்து செல்லுவீர்கள். அப்போது மீண்டும் உங்களை அழைப்பதற்காக நான் வரவேண்டும். அவ்வாறு வருகின்ற போது உங்கள் மனம் குளிரும்படியாக நல்ல வார்த்தைகளை பேசி உண்மையான அந்த ஞானம் வெளிப்படுவதற்குரிய வழிகளை எல்லாம் சொல்லித்தர வேண்டும். அவ்வாறு நல்ல வழிமுறைகளை ச் சொல்லித் தந்து தேனும் பாலும் போல மனம் மகிழும் படியாக இந்த உலகத்தில் வாழ வேண்டும்.

நானும்வந்து நிரத்தணுமே-பெண்ணே
நல்லமொழி சொல்லணுமே
தேனும்பாலும் போலநாமள்-பெண்ணே
தேசமதில் வாழணுமே

அவ்வாறு வருகின்ற போது இந்த நீசகுலங்கள் எல்லாம் பேசி இழிவுபடுத்துவார்கள். பெண்களுக்கு வீங்கி என்று பொல்லாப் பயல்கள் பேசுவார்கள்.

கண்டுஇந்த நீசர்குலம்-சுவாமி
களிப்புச்சொல்லி யேசணுமே
பெண்டுகட்கு விங்கியென்று-சுவாமி
பொல்லாப்பய லேசணுமே

ஆனால் கலிமாசு கொண்டவர்களால் இறைவனின் திருவிளையாடல்களை உணர்ந்து கொள்ள இயலாமல் நகைத்து நரகத்தில் வீழ்ந்து அழிந்து விடுவார்கள்.

காரணத்தை யறியாமலே-பெண்ணே
கலிப்பயல்கள் தானகைத்தால்
மாரணத்தின் தீர்வைதன்னில்-பெண்ணே
மடுநரகம் பூத்திடுவேன்

செம்பவள நற்பதியின்–சுவாமி
தெருவலங்கள் சுற்றிவந்தோம்
பொன்பதிக்குள் நாமள்புக்கி – சுவாமி
மறு பொழுதுவந்தால் வருவோமையா

இதுவரையிலும் ஆண்மை விழிப்பு பெற தயாராக இருக்கின்றவர்களுடைய உள்ளங்களின் தன்மையை தெளிந்து எடுத்துள்ளோம். மேலும் ஆன்ம விழிப்பு பெற இருக்கின்ற பேர்களை தேர்ந்து எடுப்பதற்காக நாம் எழுந்தருளுவோம் என்று நிறைவு செய்தார்கள்.

சோபனமே சோபனமே – பெண்ணே
திருநடனச் சோபனமே

தேவர்குரு நாரணர்க்கும் – அவர் தேவியர்க்கும் சோபனமே
பூமலர்ந்த ஈசுரர்க்கும் – அவர் பொன்தேவி மாமதுமைக்கும்
காமனந்த நாரணர்க்கும் – தெய்வக் கன்னியர்க்கும் சோபனமே
பூமடந்தை நாயகிக்கும் – நல்ல பொன்னுமண்டைக் காட்டாளுக்கும்
பார்மடந்தை நாயகிக்கும் – சிவ பகவதிக்குஞ் சோபனமே
தெய்வானை நாயகிக்கும் – நல்ல சிறந்தவள்ளி மடந்தையர்க்கும்
ஐவர்குல நாரணர்க்கும் – கன்னி அரிவையர்க்குஞ் சோபனமே

விருத்தம்

துடியிடைக் கன்னி மாரைத் திருமணந் திருமால் செய்து
குடிபுகழ்ச் சான்றோர் மக்கள் குரவைகள் முழக்கத் தோடு
திடிரெனத் தெருக்கள் சுற்றித் தேவியு மன்ன ராகப்
படிமிசைப் பதியி னுள்ளே பதிந்துவந் திருந்தா ரன்றே

சோபனம்
சோபனம் என்பது அழகு ஆனந்தம் மங்கலம் வாழ்த்து நன்மை சுபம் என்ற பொருட்களை தருவதால் இதுவும் ஐயா ஒரு திருக்கூட்டமாக இம்மண்ணகம் எழுந்தருளி அனைத்து திருவருள் சக்திகளும் வகைவகையாக மாறி உருவெடுத்து இயல்புநிலை அருள்வதையை காட்டுகின்றது.

இதனால் எல்லாவித திருவருள் சக்திகளுக்கும் தாமே ஆதாரம் என்பதை உணர்த்துவதோடு சாதி மத இன மொழி பேதமின்றி எல்லா மக்களும் நல்ல நலன்களை பெற்று நிறைநிலையடைந்து பேரானந்த பெருவழியில் திளைத்திருக்க அருளும் பரபிரம்மமே ஐயா வைகுண்டர் என்பதை வெளிப்படுத்துகின்றது.
முதலில் சப்த மாதார்கள் சாமியை பார்த்து உமது திருவருளால் அனைவருக்கும் மங்களம் உண்டாகட்டும் என்று வாழ்த்துகின்றார்கள்.

அடுத்ததாக தேவகுரு நாரணருக்கும் குரு தெய்வமாக ஞானசாரியாக இம் மண்ணகம் வந்து எழுந்தருளிய நாராயணனுக்கு அவருடைய தேவிமார்களுக்கும் மங்கலம் சுபமங்கலம் என்று வாழ்த்தப்படுகின்றது.

அடுத்ததாக வைகுண்ட மாமணியுள் கலந்து நின்றருளும் பூம லர்ந்த ஈஸ்வரிக்கும் அவர் தேவியான மாதுமைக்கும் மங்கலம் சிவமங்கலம் என்று வாழ்த்தப்படுகிறது .
அனைத்து ஜீவர்களையும் தம் மனைவியர்களாக்கி பரிசுத்தமாகிய பேரின்பம் அருளும் காமானந்த நாராயணனுக்கும், அவரோடு ஐக்கியமாகி பேரின்பத்தில் திளைக்கும் சுத்த ஆன்மாக்களான தெய்வ கன்னியர்களுக்கும் மங்களம் சுபவமங்களம் என்று வாழ்த்தப்படுகின்றது.

அது போன்று பூமடந்தை நாயகியான பூமாதேவிக்கும் மண்டைக்காட்டாளான சரஸ்வதிக்கும் உமையான பார்மடந்தை நாயகிக்கும்,,சிவ பகவதிக்கும், வள்ளி தெய்வானை ஆகிய அனைத்து சக்திகளுக்கும் ஐவர்குல நாரணருக்கும், கன்னி அரிவையர்க்கும் மங்களம் சுபமங்களம் என்று வாழ்த்தினார்கள்.